மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, அண்மையில் பாராளுமன்றக் குழு தமிழ்நாட்டிற்கு வந்திருந்தபோது சவரத் தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கை மனுவைத் தந்திருக்கிறார்கள். மத்திய அரசும் பரிசீலனைசெய்து மாநில அரசின் கருத்தைக் கேட்கிற நேரத்தில் இந்த அரசு அனுதாபத்தோடு பரிந்துரை செய்யும்.

அடுத்து எந்தெந்த வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும் என்று மனுச் செய்திருக்கிறார்கள் என்று கேட்டார்கள். பல வகுப்பினர் அடங்கிய பட்டியல் அதிலே இருக்கிறது. அதை இந்த அவையிலே சொன்னால் நேரம் அதிகமாகும். ஆகவே நேரத்தைக் கருதி தனியாக வேண்டுமென்றால் அச்சடித்து கொடுத்து விடுகிறேன்.

(முற்பகல் 9–20)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, இந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தியதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மீண்டும் மத்திய அரசை அந்த லிஸ்ட்டில் சேர்க்க வேண்டும் என்று அரசாங்கம் வற்புறுத்தி அதற்காக இந்தச் சட்டசபையிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அனுதாபம் இருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். மீண்டும் அரசு பரிந்துரை செய்யும். இதற்காக சட்டசபையில் ஒரு தீர்மானம் போட வேண்டிய அவசியம் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

லாரி போக்குவரத்தில் பணிபுரிவோர்களுக்கு நஷ்ட ஈடு

* வினா எண். 693— திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார—

(அ) லாரி போக்குவரத்தில் ஈடுபடும் டிரைவர், கிளீனர்கள் விபத்தில் இறந்தால் நஷ்டஈடு கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) நஷ்டஈடு கேட்டு தொழிலாளர்கள் முதல்வரிடம் விண்ணப்பித்துள்ளார்களா ?

1979 ஏப்ரல் 17]

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்):

(அ) ஆம்.

(ஆ) லாரி பஸ், வாடகைகார், ஆட்டோ ரிக்ஷா போன்ற போக்குவரத்து வாகனங்களினாலோ (டிரான்ஸ்போர்ட் வெகிகில்ஸ்) அல்லது மோட்டர் வண்டி, டிராக்டர், மோட்டர் சைக்கிள் போன்ற போக்குவரத்து அல்லாத (நான் டிரான்ஸ்போர்ட் வெகிகிள்ஸ்) வாகனங்களினாலோ தமிழகத்திற்குள் விபத்து ஏற்பட்டு அதனால் உயிரிழக்க நேரிடின் இறந்து போனவரின் குடும்பங்களுக்கு ஒராயிரம் ரூபாய், முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. டிரைவர்கள், கிளீனர்கள், குடும்பங்களுக்கும் இந்நிதியுதவி அளிக்கப்படும்.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டிரைவர்கள், கிளீனர்கள் சங்கத்திலிருந்து அரசுக்கு வந்த கோரிக்கைகள் என்ன? அரசு அந்தக் கோரிக்கைகள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ப. கோ. கிட்டு: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, லாரி கிளீனர்கள் சங்கம் பல கோரிக்கைகளை அரசுக்கு வைத்திருக்கிறது. அதிலே மிக முக்கியமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விபத்தைப் பற்றியது. தாங்கள் தருகின்ற விவரம் நீண்டதாக இருந்தால் அச்சிட்டு அவையில் வைக்கலாம்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரமாகச் சொல்கிறேன். கோரிக்கை 1, குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோரிக்கை 2. ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோரிக்கை 3. அரசின் பரிசீலனையில் உள்ளது. கோரிக்கை 4. அரசின் தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறைக்கு விண்ணப்பிக்கலாம். கோரிக்கை 5. ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கோரிக்கை 6. சங்கத்தின் கோரிக்கை தெளிவாக இல்லை. கோரிக்கை 7. இக்கோரிக்கை அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் லாரி தொழிலாளர்களுக்கு இறந்துவிட்ட பிறகு அவர்களுக்குப் பாதுகாப்பு தொகையாகக் கொடுக்கப்படுகிற ரூபாய் 1,000ஐ ரூபாய் 5,000 ஆக உயர்த்திக் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இது முக்கியமான கோரிக்கை. இதை அரசு கவனிக்குமா ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இந்த மாதிரி விபத்தில் இறக்கிற டிரைவர்கள், கிளீனர்கள் ஆகியவர்களுக்கு ஏற்கெனவே இருக்கிற சட்டப்படி, வாகனச் சட்டம் 110. அ. பிரிவில் வகை செய்யப்பட்டிருக்கிறது. விபத்து நேர்ந்து இறந்துவிட்டால், அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அந்த நட்ட ஈட்டைப் பெறுவதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது.

கன்னியாகுமரி-திருச்செந்தூர் கடற்கரைச்சாலை.

*வினா எண். 694—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர் வரை உள்ள கடற்கரை சாலையை (Coastal Road) விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அப் பணி மேற்கொள்ளப்படும்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரைச் சாலை, தேசீய சாலை, நெடுஞ்சாலை பக்கத்தில் இருக்கிற மண்ணை வெட்டி எடுக்கிறபோது, அவைகளுக்கு அருகாமையில் உள்ள சிறு விவசாயிகளுடைய நிலங்களை எடுத்துக் கொள்கிறார்கள். குறைந்தது 4 சென்ட் நிலத்தை எடுத்துக் கொள்கிற நிலை இருக்கிறது. அந்தச் சிறிய விவசாயிகள் பயன் அடையக் கூடிய வகையில் அவர்களதுச் சிறு நிலத்தையும் அரசே எடுத்துக் கொண்டு அவர்களுக்கு நட்ட ஈடு வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS